## தேனி – அல்லிநகரம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
## முன்னிலை : திரு.அ.ஜஹாங்கீர் பாஷா, பி,ஏ.,

ந.க.எண்.786/2024/எப்1 நாள்.02.08.2024.
ம.அ.எண்.05/2024/எப்1

**பொருள்:** மனைஉட்பிரிவு – தேனி–அல்லிநகரம் நகராட்சி – இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு – F , பிளாக்–5, நகரளவு எண்.14/4 பழைய சர்வே எண்கள். 101 pt , 131 pt இல் கட்டுப்பட்டுள்ள 1366.80 ச.மீ பரப்பளவுள்ள இடத்திற்கு மனை உட் பிரிவு செய்து தொழில் நுட்ப அனுமதி வரப்பெற்றது – இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடல் – தொடர்பாக.

**பார்வை:**
1. மனுதாரர் திரு/திருமதி. C.R.வம்சீதர் என்பவரின் ஆன்லைன் விண்ணப்பம் நாள்.20.11.2023.
2. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தேனி அவர்களின் கடிதம் ந.க.எண். THENI/PB2RNINB/2023/TCP நாள்.24.11.2023.

* * * * *

**உத்தரவு :**

தேனி –அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு – F , பிளாக்–5, நகரளவு எண்.14/4, பழைய சர்வே எண்கள். 101 pt , 131 pt இல் கட்டுப்பட்டுள்ள 1366.80 ச.மீ பரப்பளவுள்ள இடத்திற்கு உத்தேச குடியிருப்பு மனைஉட்பிரிவு செய்வதற்கு பார்வை–1 இல் காணும் விபரப்படி மனுதாரரால் விண்ணப்பிக்கப்பட்டது. மேற்படி விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு நகர் ஊரமைப்பு துறையின் மூலம் இடமானது ஆய்வு செய்யப்பட்டதை தொடர்ந்து , பார்வை –2 இல் காணும் உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் , தேனி அவர்களின் கடித ந.க.எண். THENI/ PB2RNINB/ 2023/TCP நாள்.24.11.2023 ன் படி, மேற்படி மனைப்பிரிவு வரைபடத்திற்கு L.P/AD DTCP (TD) NO: SWP/128/2023 என எண்ணிடப்பட்டு மனைஉட்பிரிவு செய்து தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி வரப்பெற்ற தொழில்நுட்ப ஒப்புதலுடன் கூடிய வரைபடத்தில் , குறிப்பிடப்பட்டுள்ள நிலையிலுள்ள சாலையானது ஏற்கனவே ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு L.P/AD DTCP (TD) NO:SWP/113 / 2023 இல் உள்ள 18.30 மீட்டர் அகலமுள்ள சாலையாகும். மேற்படி சாலையானது நகரளவு எண்.14/2 இல் கட்டுப்பட்டுள்ளது. மேற்படி மனைஉட்பிரிவு செய்யப்பட்ட பரப்பில் 10 சதவீத இடத்திற்கு ஈடாக அரசு வழிகாட்டு மதிப்பீட்டு தொகை மனுதாரரால் அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மனைகளின் எண்ணிக்கை –05 எண்ணம் , அதன்படி நிலையில் உள்ளது. மேற்படி மனை உட்பிரிவு செய்யப்பட்ட மனைகளுக்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவில் உள்ள சாலை அணுகுசாலையாக அமைவதால் , மழைநீர் வடிகால் , சிறுபாலங்கள் , தார்சாலை மற்றும் சோலார் தெருவிளக்குகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு நிலையில் உள்ளது. மேலும் மேற்படி, மனைப்பிரிவிற்கு நகராட்சியின் மூலம் வழங்கப்பட்ட கேட்பு அறிவிப்பின்படி 5 மனைகளுக்கான காலியிடவரியும் , இதர கட்டணங்களும் செலுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி இடத்திற்கு மனை உட்பிரிவு செய்து **இறுதி ஒப்புதல்** வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

2/8/24

ஆணையாளர்,
தேனி–அல்லிநகரம் நகராட்சி.

2.8.24

பெறுநர்:

திரு/திருமதி. C.R.வம்சீதர்,
த/பெ,ராம்ராஜ்,
82 வைசியால் வீதி,
கோயம்புத்தூர்,

நகல்:

உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தேனி மாவட்டம், தேனி.